Registered as a Newspaper in Ceylon

** விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 234

தபால்பெட்டி எண்: 49
போன்:389

National Tamil Daily

தேசிய தினசரி

கீலக வருஷ புரட்டாதி 16 றஜப் 9 புதன்கிழமை (2-10-68)

ஹோப் கப்பல்
கண்வைத்திய டாக்டர் போல்டின்
அவர்களுடைய விரிவுரைகளில்
பங்குபற்றியவர்
ந.சேதுராஜா
பல்கட்டுபவர்
கண் பரிசோதகர்
மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

# கல்லுண்டாய் உப்பள உற்பத்தி அதிகரிப்பு

## 17 ஆயிரம் அந்தர் இந்த வருடம் கூடுதலாகும்

அராலி, செவ்.

கல்லுண்டாய் உப்பளத்தில் இவ்வாண்டு உப்புஉற்பத்தி கடந்த ஆண்டைவிட 17 ஆயிரம் அந்தர் கூடுதலான விளைவு எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு இதுவரை 25 ஆயிரம் அந்தர் அறுவடை செய்யப்பட்டிருக்கிறது.

பிரதிவருடமும் உப்பு உற்பத்தி கல்லுண்டாய் உப்பளத்தில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. 1965-ம் ஆண்டில் 8 ஆயிரம் அந்தர் உப்பு அறுவடை செய்யப்பட்டிருந்தது. 1966-ஆண்டு ஒன்பதினாயிரம் அந்தர் உப்பும், கடந்த ஆண்டில் 23 ஆயிரம் அந்தர் உப்பும் விளைவிக்கப்பட்டிருந்தது.

வலிமேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சமாசத் தலைவர் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

## அண்ணா வெளியேறினார்

நியூயோர்க், ஆக் 1

தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை உணவுக் குழாயில் வளர்ந்திருந்த சதையை அறுவை சிகிச்சை செய்து கொண்ட பின் இன்று நியூயோர்க்கிலுள்ள மெமோரியல் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினார்.

## துறைமுக கூட்டு ஸ்தாபனத்துக்கு ரூபா 80 லட்சம் நஷ்டம்

கொழும்பு, செவ்.

துறைமுக கூட்டு ஸ்தாபனம் ரூ. 80 லட்சம் வரையான நஷ்டத்தை அடைந்துள்ளது.

1967-68-ம் நிதிவருடத்தில் இவ்வித நஷ்டம் ஏற்பட்டுள்ளது. முந்திய வருடங்களை விட இந்த நஷ்டம் இரட்டிப்பாகக் கூடியுள்ளதாகவும் சமீபத்திய விலை உயர்வுகளே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போன்மூலம் காந்தி உபதேசம்

புதுடில்லி, ஆக். 1

காந்திஜீயின் உபதேசங்களை அவரது குரலிலேயே கேட்கவிரும்புவோர்கள் 127 என்ற இலக்கத்தை டயல் செய்தால் போன் மூலம் அவரது உபதேசத்தைக் கேட்கலாம்.

காந்தி ஜயந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதுடில்லியில் இவ்வித ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

நாளை ராஜ்காட்டில்காந்தி ஜெயந்தி நூற்றாண்டு விழா ஆரம்பத்தைக் குறிக்கும் வைபவமொன்று நடைபெறவிருக்கிறது. இதில் பாரத ஜனாதிபதி டாக்டர் சாகிர் ஹுசேன் 'வைத்து' உரை நிகழ்த்துவார்.

1970-ல் இலங்கை

## உணவு உற்பத்தியில் தன்நிறைவு காணும்

### வாஷிங்டனில் நிதி அமைச்சர்

வாஷிங்டன், செப். 1

இலங்கை 1970-ம் ஆண்டில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்டுவிடும் என்றும், பொதுவாக இலங்கை விவசாயத் துறையில் முன்னேற்றம் கண்டு விட்டது என்றும் இலங்கை நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயகா இன்று உலக வங்கி கவர்னர்மகாநாட்டில் தமது தலைமையுரையில் எடுத்துக் கூறினார்.

திரு. வன்னி நாயகா மேலும் பேசுகையில், இலங்கை விவசாயத்தில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ள போதிலும், இன்னும் சில அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்தால் உணவுற்பத்தியில் மிகவிரைவில் தன்னிறை கண்டுவிடும் என்பதில் சந்தேகமே இல்லை என்றார்.

நீர்ப்பாசனம், மேலும் புதிய காணிகளை விவசாயத்தில் புதிய பயிற்சி அளித்தல், போன்றவற்றை இலங்கை பெரும் பங்கத்தில் இலங்கை மிகவிரைவிலேயே உணவுற்பத்தியில் தன்னிறைவு கண்டுவிடும் என்றும் அவர் கூறினார்.

பாரத துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இம்மகாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் உலக வங்கி ஆசியாவில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கடன் வழங்குவதை மேலும் அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

## எழுத்துக் கொப்பிகள் விலைக் கட்டுப்பாடு நீங்கியது

கொழும்பு, செவ்வாய்

எழுத்துக் கொப்பிகளின் விலைக்கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளதாக காகித ஆலை கூட்டுஸ்தாபன தலைவர் திரு கே. சி. தங்கராசா அறிவித்துள்ளார்.

நேற்று வெளியான அரசாங்க வர்த்தமானியில் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

இல்லறை விற்பனையின் படி 40 பக்கங்கள்கொண்ட எழுத்துக்கொப்பி 18 சதத்துக்கு அதிகரிக்காமலும் 80 பக்கங்கள் கொண்ட எழுத்துக்கொப்பி 32 சதத்துக்கு அதிகரிக்காமலும் விற்பனை செய்யப்படும்.

வர்த்தகர்கள் 8 சத லாபத்துக்கு கூடுதலாக இந்த எழுத்துக்கொப்பிகளை விற்பனை செய்யக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அச்சுவேலி ஆலயப்பிரவேச வழக்கில்முகாமையாளர்விடுதலை

அளவெட்டி, செவ்.

அச்சுவேலி உலவிற்குள பிள்ளையார் ஆலயப்பிரவேச வழக்கில் எதிரியான ஆலய முகாமையாளர் திரு. ஆர். குமாரவேலு இன்றாலை விடுதலை செய்யப்பட்டார். சம்பவம்நடந்த சமயம் எதிரி அந்த இடத்தில் இருக்கவில்லை என்றுப் சாட்சியங்கள் நம்பமுடியாததாக இருப்பதாலும் தாம் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளிப்பதாக இவ்வழக்கை விசாரணை செய்த மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் தீர்ப்பளிக்கையில் தெரிவித்தார்.

குற்றச்சாட்டு

அச்சுவேலி உலவிற்குளம் பிள்ளையார் கோவில் முகாமையாளரான திரு. ஆர். குமாரவேலு என்பவர் அச்சுவேலியைச் சேர்ந்த குருநாதி கணேசன் சென்ற வருடம் ஜூலை மாதம் 12ம் திகதி மேற்படி ஆலயத்தில் பிரவேசிக்க முயற்சி செய்த போது தடுத்ததாக 1957ம் ஆண்டு 21ம் இலக்க சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச்சட்டத்தின்கீழ் குற்றஞ்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அட்வக்கேட் திரு. எம். ஆலாலசுந்தரமும், செனட்டர் சு. நடராசாவும் வழக்காளிதரப்பில் ஆஜரானார்

(8-ம் பக்கம் பார்க்க)

நாவலர் சந்தியில்

## லொறி விபத்தில் ஒருவர் மாண்டார்

யாழ்ப்பாணம், புதன்

நாவலர் சந்தியில் 9 குழந்தைகளின் தந்தையான ஒருவர் லொறியொன்றுடன் மோதுண்டு ஸ்தலத்திலேயே மாண்டார்.

நேற்று மாலை நடந்த இக் கோரவிபத்தில் மாண்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மைக்கேல் [40 வயது] என்பவரென பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

[தே. நி]

★ சிறந்த தையல்!
★ குறைந்த விலை!!
★ நீடித்த பாவனை!!!

நீங்கள் கம்பீரமாக தோற்றமளிக்க
ஏற்றவை

லதா சேட்ஸ்

LATHA

லதா இண்டஸ்றீஸ் — நவீன உடைத் தயாரிப்பாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் 280 A நாவலர் வீதி திரு. திலகையம்பலம் நலரெத்தினம் அவர்கள் இடம் 1-1-67க்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 31-10-68 காலை 9-30 மணி தொடக்கம் அதேயிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனையாளர்.

1000


# யாழ். நகரில்
# காந்தி நூற்றாண்டு விழா
## இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், புதன்

மகாத்மாகாந்தியின் நூற்றாண்டு ஜெயந்திவிழா இன்று ஆரம்பமாகின்றது இன்றிலிருந்து நாடு பூராவும் ஜெயந்திவிழாவைக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் இன்று மாலை 5 மணிமுதல் மறுமலர்ச்சி மன்றத்தாரால் காந்தி நூற்றாண்டுவிழா கொண்டாடப்படுகின்றது. விழா நிகழ்ச்சிகள் விபரம் பின்வருமாறு:

மாலை 5-00 மங்களதீபம், 5-10 தலைவர் உரை, 5-20 நாதஸ்வரஇசை, இரவு 6-30 இசைமணி மோகனும் பிகை கணேசனும் காந்திய கீதங்கள் இசைக்கப்படும். 7-00 மணி வேம்படி மகளிர் கல்லூரியினர் அளிக்கும் 'பாரதத்திற்குஞ்சலி' என்னும் கலைநிகழ்ச்சி, 7-30 சொற்பொழிவுகள் கிறிஸ்தவ சேவா ஆச்சிரம சங்கைக்குரிய ஐ. தே. யேசுசகாயம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி. திரு. கு. நேசையா ஆகியோர் சொற்பொழிவு நடாத்துவார்கள். மறுமலர்ச்சி நிலையத்தாரின் "சாந்தி நிலையம்" என்னும் நாடகமும் நடைபெறும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரார்த்தனைமண்டபத்தில் யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் தலைமையில் இன்று மாலை முதல் காந்தி நூற்றாண்டு ஞாபகார்த்த சொற்பொழிவுகள் நடைபெறும். இளைய ஜோதி ஸ்ரீமத் சுவாமி திலகர் மஹராஜ் இன்றிலிருந்து இம்மாதம் 9-ம் திகதிவரை தினசரி மாலை 6 மணிக்குச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தெய்வீக வாழ்க்கை, பிரணவத்தின் தத்துவ ஞானம், தர்மம், பக்தி, மறுபிறப்பு ஆகியனபற்றி சொற்பொழிவு நடாத்தப்படவிருக்கின்றது. (சா. நி)

### கொழும்பில்

இன்று இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் நடைபெறவிருக்கும் காந்தி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்:

காலை 8-30 பிரார்த்தனை, 8-35 நூற்புயக்ஞம், 8-45 வண. நிக்கறத்தி வேசந்ததோ ஸ்ரீ நரேந்திரபால் ஆகியோரின் சொற்பொழிவுகள், 9-00 மணி திரு. நா. இரத்தினசபாபதி அச்சு உபகரணங்களை அன்பளிப்புச்செய்தல், 9-15 காந்தி நூற்றாண்டு விழாக் குழுத்தலைவரும் செனட்சபைத் தலைவருமான திரு. ஏ. இரத்நாயக்கா மரம் நடுதல், 9-30 சிரமதானம், பிற்பகல் 2 மணி முதல் 3 மணிவரை கருத்தரங்கம்.

## முதல் தேவநற்கருணை

தாழையடி, செவ்வாய்

தாழையடி கத்தோலிக்க சிறுவர்களின் முதல் தேவநற்கருணைபெறும் வைபவம் அண்மையில் தாழையடி பங்குக் கோவிலில் நடைபெற்றது.

முதல்நாளிரவு திருமணித்தியாலம், திவ்வியபூசை என்பனவும் இடம்பெற்றன.

## வெளிநடப்பு

சுழிபுரம், செவ்வாய்

வலிகாமம் மேற்கு ஐக்கிய மாதர்சங்கச் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக சங்காவனையைச் சேர்ந்த திரு. க. கந்தசாமி வெளிநடப்புச் செய்து கூட்டத்தை பகிஷ்கரித்தார். சங்கத்தலைவர் திரு. க. கந்தசாமி. தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பால் விற்பனை சம்பந்தமாக ஏற்பட்ட விவாதத்தின்போதே இச் சம்பவம் நடைபெற்றது.


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

6 சான் உயரமுள்ள ஒரு சோடி எருதுமாடுகளும் நல்ல நிலைமையிலுள்ள டேவிற்பிறவுண் டிராக்டர் பெற்றிக் டிரெயிலர், டிஸ்க், டில்லர், மண்வெட்டி மற்றும் உபகரணங்கள் விற்பனைக்குண்டு. வேண்டுவோர் காலையிலும், மாலையிலும் தொடர்பு கொள்ளவும். அ. சுப்பிரமணியம், C. M. S. தேவாலயத்தடி, உரும்பராய்.

235

### தேவை

தமிழ், ஆங்கிலம் அச்சுக்கோர்க்கும் அனுபவமுள்ளவர்க்கும் (கொம்போசிற்றர்) வேலை பயில விரும்புவோருக்கும் வேலைவாய்ப்புண்டு. உடன் நேரில் வரவும். திருவள்ளுவர் அச்சகம், முத்திரைச்சந்தையடி, நல்லூர்.

248

### நன்றி நவிலல்

24-9-68ல் மரணமான எனது அன்பு மனைவி திருமதி பூரணம் இராசரத்தினத்தின் ஈமக்கிரியைகளின் போது நேரில் சமுகமளித்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எம்முடன் துயரைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் நன்றிகள்- க. இராசரத்தினம் (மனேஜர்) மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

242

### காணவில்லை

திறப்புகள்

28-9-68ல் யாழ்நகரிலிருந்து பிற்பகல் 3 மணிக்கு ஊர்காவற்றுறை சென்ற பஸ்ஸில் திறப்புக்கோர்வைகள் மூன்றும், பெரிய திறப்பு ஒன்றும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

245


# "மண்ணரிப்பு அபாயம் நாட்டை எதிர்நோக்குகிறது
## பயிர்களை உற்பத்திசெய்ய முடியாத நிலை உருவாகும்"

உடுப்பிட்டி, செவ்.

"இன்று நாட்டில் பெரும் மண்ணரிப்பு அபாயம் ஏற்பட்டுள்ளது. இம் மண்ணரிப்பை உடனடியாகத் தடுக்காது தொடர்ந்து நிலவவிட்டால் நிலவளம் பாதிக்கப்படுவதுடன், உணவுப் பயிர்களை உற்பத்தி செய்ய முடியாத நிலைமை வெகுவிரைவில் ஏற்படலாம். தொடர்ந்து மேலதிகமான உணவுப் பொருள்களை இலங்கை இறக்குமதி செய்யவேண்டிய நிலைமை உருவாகும்."

இவ்வாறு ஆசிரியர் திரு. வ. மகாலிங்கம் நெல்லியடி மத்தியமகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவர் மன்றக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். திரு. ஏ. இராசதுரை தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமற்றநிலையிலேயே இருந்து வருகின்றது. இந்நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டுமாயின் தேயிலை, ரப்பர் தோட்டங்கள் தேசியமயமாக்கப்படவேண்டியது அவசியம். அத்துடன்சிறந்த கைத்தொழிற்சாலைகளும் உருவாக்கப்பட வேண்டும்.

செயலாளர் திரு. எஸ். வாசீத் நன்றியுரைகூறினார்.

# 'கல்வியின் தரம் மோசமாகிறது'
## அரசியல் வாதிகளைச் சாடுகிறார் பௌத்த காங்கிரஸ் தலைவர்

காலி, செவ்.

"அரசியல்வாதிகளின் தலையீட்டால் கல்வித்தரம் மோசமான நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இன்றைய மந்திரிகளும் எம். பிக்களும் ஆசிரியர்களை தமது உபகரணங்களாகப் பாவிக்கிறார்கள். இது கண்டிக்கப்படவேண்டியதுடன் தவிர்க்கப்படவேண்டும்" என்று காலியில் கல்வி நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ்தலைவர் திரு. திரு. ஏச். டபிள்யூ. அமரசூரியா பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ஏ. டபிள்யூ. அமரசூரியா மேலும் பேசுகையில் சமயக்கல்வி இல்லாத கல்வியினால் எவ்வித பயனுமில்லை என்றார். பாரிலிமென்ட் ... அமைக்கப்பட்டபோதிலும் ... மாட்டாது என்றும் அவர் சொன்னார்.

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்காவும் பேசினார்.

## பாடசாலை உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண பாடசாலை உதைபந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கு இடையில் நடாத்திவரும் உதைபந்தாட்டப் போட்டி இம் மாதம் 4-ம்திகதி ஆரம்பமாகின்றது. இம்முறை இப் போட்டி மிகவும் திறமையாகவும் வேகமாகவும் நடைபெறவேண்டுமென்பதற்காக இச் சங்கக் காரியதரிசி திரு. வி. ரி. கணேசலிங்கம் பல முன்னேற்பாடுகளை முன்னதாகவே செய்துள்ளார். இம்முறை பி பிரிவு போட்டிகள் யாவும் அவ்வப் பாடசாலைகள் மைதானத்திலும் ஏ பிரிவுப் போட்டிகள் யாவும் யாழ் விளையாட்டரங்கிலும் நடைபெறும்.

(சே. நி)

## காந்திநூற்றாண்டு ஜெயந்திவிழா

பருத்தித்துறை. செவ்.

"பல்வேறு இனங்கள் வாழும் இந்திய உபகண்டத்தில் அந்நிய மொழியான ஆங்கிலம் பொது மொழியாக்கப்படுவதை காந்தி எதிர்த்தார். சகல இனங்களையும் தேசிய விடுதலைப் போராட்டத்திற்காக ஓரணியில் திரட்டினார்".

இவ்வாறு நேற்று முன்தினம் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தில்நடைபெற்ற காந்திஜெயந்திவிழாவில் பேசிய ஆசிரியர் திரு. பீ. ஏரம்பமூர்த்தி கூறினார். கல்லூரி அதிபர் திரு. க. சிவசிதம்பரம் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

## ரஸ்க்—யூதாண்ட் சந்திப்பு

நியூயோர்க், ஒக். 1

அமெரிக்க வெளியுறவுமந்திரி திரு. டீன் ரஸ்க், ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்டை நேற்றுச் சந்தித்துச் சுமார் அரை மணிநேரம் வரை பேசினார்.

வியட்நாம், மத்தியகிழக்கு நான்கு வல்லரசு மாநாடு இவை பற்றி இருவரும் கருத்துப்பரிமாற்றம் செய்து கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நான்கு வல்லரசுகளின் உச்சி மாநாடொன்று நடைபெற வேண்டுமென யூதாண்ட் அண்மையில் ஆலோசனை தெரிவித்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அமெரிக்க வெளியுறவுமந்திரி திரு. டீன் ரஸ்க் தற்போதைய ஐ. நா. தொடரின் போது மற்றும் நாடுகளின் உயர் அதிகாரிகளையும் வெளியுறவு மந்திரிகளையும் அடுத்தடுத்து நாட்களில் சந்திக்கவிருக்கிறார்.


2வது வாரம்!

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-45

என். டி. ராமாராவ் ஜெயலலிதா, ராஜஸ்ரீ நடித்த

அபூர்வப்பிறவிகள்

98-வது தினம்!

ராணி (யாழ்ப்பாணம்)

ஜெமினி — சரோஜாதேவி நடித்த

பணமா பாசமா

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p. m.
Clint Eastwood,
Marianne Koch
in
Fistful of Dollars

மானிப்பாய்

வெஸ்லி சினிமா

தினசரி 6-30, 9-30

விடுமுறைதினங்களில் 2-30

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நாகேஷ் நடித்த

படகோட்டி

மகத்தான 3வது வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்நகர்) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)


கலைப்பேரரசர்

எம். ஜி. ராமச்சந்திரன்

கன்னடத்து பைங்கிளி

சரோஜாதேவி

கே. ஆர். விஜயா - மனோகர் - நாகேஷ்



நடித்த

நான் ஆணையிட்டால்

கிங்ஸ்லி (கொழும்பு)

ரவிச்சந்திரன் - ஜெயலலிதா நடித்த

நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பதவிக்கு வந்தால் குண்டுவீச்சை நிறுத்துவேன்

## ஆனால் நிபந்தனைகளுடன் என்கிறார் அமெரிக்க உப ஜனாதிபதி

வாஷிங்டன், ஒக்.1

அமெரிக்க உப ஜனாதிபதியும் அமெரிக்க ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்டியிடுபவருமான திரு. ஹியூபேட் ஹம்ப்ரி தாம் பதவிக்கு வந்தால் வட வியட்நாம் மீதான அமெரிக்கக் குண்டுவீச்சை நிபந்தனைகளுடன் நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு நேற்று டெலிவிஷனில் தோன்றிப் பேசியபோதே அவர் இவ்வாறு அறிவித்தார்.

வடவியட்நாம் மீதான குண்டுவீச்சை நிறுத்துவது பற்றித் தாம் ஆலோசிக்கமுன் ஹனோய் இதுபற்றி என்ன கருதிக் கொண்டுள்ளது என்பது சம்பந்தமாகத் தாம் அறிந்துகொள்ள முற்படுவார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க குண்டுவீச்சை நிறுத்துவதன்மூலம் வியட்நாம் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வருமுகமாக வெற்றிகரமான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு ஒரு வழி பிறக்குமெனத் தாம் நம்புவதாகவும் உப ஜனாதிபதி திரு ஹம்ப்ரி கூறினார்.

ஆனால் அதே நேரத்தில் ஹனோய் நம்பிக்கை குறைவாகப் போரில் நடந்து கொள்ளும் பட்சத்தில் குண்டுவீச்சை மீண்டும் ஆரம்பிக்கும் உரிமையைத் தாம் ஒதுக்கி வைத்துக் கொள்வாரெனவும் அவர் தெரிவித்தார்.

திரு ஹம்ப்ரியின் இப்பேச்சு ஜனாதிபதி திரு. ஜோன்ஸனின் கொள்கையிலிருந்து விலகியுள்ள முதலாவது பேச்சாக இங்குள்ள அரசியல் அவதானிகளினால் கருதப்படுகிறது.

## பியாவ்ராத் தலைவர் பிடிவாதம்

### பிரிட்டிஷ் மந்திரி கவலை

லண்டன், ஒக். 1

சமஷ்டி நைஜீரியா சென்று விட்டு லண்டன் திரும்பியுள்ள பிரிட்டிஷ் மந்திரி செப்போர்ட் பிரபு, உள்நாட்டுப்போரைத் தொடர்ந்து நடத்துவதென்ற பியாவ்ராத் தலைவர் கேர்ணல் ஒஜுக்குவின் முடிவை, 'விவேகமற்ற, தற்கொலைக்குச் சமமான முடிவு' என்று வர்ணித்துள்ளார்.

சமாதான அடிப்படையில் போரை நிறுத்த முன்வருமாறு தாம் பியாவ்ராத் தலைவரிடம் ஆலோசனை தெரிவித்ததாகவும், ஆனால் கேர்ணல் ஒஜுக்குவோ, போரைத் தொடருவதென்ற தமது முடிவில் பிடிவாதமாக நிற்பதாகவும் தெரிவித்த செப்போர்ட்பிரபு, அவரது இந்த முடிவு வீணான உயிர்ப்பலிக்கே வழிவகுப்பதாக அமைந்துள்ளதெனக் குறிப்பிட்டார்.

---

## மெக்ஸிக்கோ பல்கலைக்கழகம்

### துருப்புகள் வெளியேறின

மெக்ஸிக்கோ, ஒக் 1

மெக்ஸிக்கோ பல்கலைக்கழக வளவிற்குள் பிரவேசித்து, கடந்த 2 வாரங்களாக நிலைகொண்டிருந்த மெக்ஸிக்கோத் துருப்புகள், பல்கலைக் கழகத்தைவிட்டு முற்றாக வெளியேறிவிட்டன.

பல்கலைக்கழகம் மீண்டும் பல்கலைக்கழக அதிகாரிகளின் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாணவர் கலகங்களையடுத்தே துருப்புகள் பல்கலைக்கழக அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தன.

துருப்புகள் வெளியேறிய அதே சமயத்தில், தெருக்களில், கைதுசெய்யப்பட்ட மாணவர்களின் தாய்மார்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர். 'எமது பிள்ளைகளுக்கு விடுதலை', 'நீதியை நிலைநாட்டுங்கள்' என்ற கோஷங்கள் அடங்கிய அட்டைகளை அவர்கள் தாங்கிச் சென்றனர்.

# ஆசிய, தெ. அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளின் ஒத்துழைப்பு

## ஆர்ஜென்டீனாவில் இந்தியப் பிரதமர் வலியுறுத்தல்

பியூனொஸ்ஏரெஸ், ஒக். 1

ஆர்ஜென்டீனாவில் தற்போது விஜயம் செய்துவரும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, தென் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாடுகளைத் தத்தம் மக்களின் நலனுக்காக ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். பியூனஸ் ஏரெஸில் அவருக்கு அளிக்கப்பட்ட அரசாங்க விருந்துபசாரமொன்றின் போதே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் பேசுகையில் இந்தியாவுக்கு ஜனநாயகம் மீதுள்ள நம்பிக்கையை வலியுறுத்தினார். கொள்கை அடிப்படையிலான அமைதியான அரசியல், சமூக மாற்றங்களையே இந்தியா விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடுகளிடையே நட்புறவை வளர்ப்பதும், சண்டை சச்சரவுகளைத் தடை செய்வதுமே இந்தியாவின் நோக்கம் என்றார் திருமதி இந்திரா காந்தி. வெவ்வேறு அரசியல் முறைகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளும் தம்மிடையே நட்பையும் பரிவுணர்வையும் வளர்த்துக்கொள்ள முடியவேண்டுமென்றும், நாடுகளுக்கிடையேயான தகராறுகளைப் பலாத்காரமுலமன்றி அமைதியான வழியிலே தீர்த்து வைப்பதையே தனது நாடு விரும்புவதாகவும் திருமதி இந்திரா மேலும் குறிப்பிட்டார்.

சீனா பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடனான இந்திய உறவுகள் பற்றி அவர் குறிப்பிடுகையில் அவற்றுடன் இந்தியா சிநேக முறையிலான உறவுகளை வளர்க்க முற்பட்டபோதும் காரணமின்றி அவை இந்தியாவின் சுதந்திரத்திற்குப்பின் இந்தியாவை நான்கு தடவை தாக்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் அபிவிருத்திக்கு நாட்டின் சகலமூலதனங்களையும் பயன்படுத்தி அதன்மூலம் அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை அளிப்பதையே இந்தியா தனது கடமையாகக் கருதுவதாக இந்தியப்பிரதமர் கூறினார். ஆனால் அதே நேரத்தில், வெளியிலிருந்து வரும் ஆக்கிரமிப்பை எதிர்நோக்கி நாட்டின் பாதுகாப்புக்காக அதன் இராணுவ பலத்தையும் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பும் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக இந்தியப் பிரதமர் ஆர்ஜென்டீனா வெளியுறவு மந்திரி டாக்டர் மொண்டேஸுடன் சர்வதேச பிரச்னைகளையிட்டுப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். பேச்சுக்களில் செக்கோஸ்லவாக்கியப் பிரச்னையும் இடம் பெற்றது.

பேச்சுக்களுக்குப் பின்னர் நிருபர்களிடம் பேசுகையில் செக். நாட்டின் மீதான சகலக் கட்டுப்பாடுகளும் நீக்கப்படுவதை இந்தியா விரும்புவதாகத் திருமதி இந்திரா தம்மிடம் மீண்டும் வலியுறுத்தியதாக டாக்டர் மொண்டேஸ் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் ஆர்ஜென்டீனா ஜனாதிபதி ஒன்கானியாவையும் சந்தித்துப் பேசினார்.

இந்தியாவுக்கும் ஆர்ஜென்டீனாவுக்கும் பொருளாதார கலாச்சார ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அதிக உதவி

## உலக வங்கித்தலைவர் மக்னமாரா அறிவிப்பு

வாஷிங்டன், ஒக்.1

உலக வங்கித் தலைவர் திரு றொபேட் மக்னமாரா ஆசியா, லத்தீன், அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளுக்கான நிதியுதவி அடுத்த 5 வருடங்களில் இரட்டிப்பாக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார். இவ்விதம் அதிக உதவி பெறவேண்டிய நாடுகளில் ஐக்கிய அரபுக் குடியரசும் இந்தோனேஷியாவும் அதி முக்கியமானவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகவங்கியின் கூட்டம் தற்போது வாஷிங்டனில் நடைபெற்று வருகிறது. அக்கூட்டத்தில் பேசுகையிலேயே திரு மக்னமாரா மேற்கண்டவாறு கூறினார்.

அடுத்த ஐந்து வருடங்களில் உலகவங்கி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு 1140 கோடி டொலர் உதவியளிக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். உலக வங்கி ஸ்தாபிக்கப்பட்ட கடந்த 22 வருட காலத்தில் அளிக்கப்பட்டமொத்த உதவித் தொகைக்கு இது சமனாகும்.

### குடும்பக் கட்டுப்பாடு

உலக மக்கள் தொகையைக் குறைக்கும் நோக்கத்துடன் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் மேற்கொள்ளப்படும். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட நடவடிக்கைகளுக்கும் உலக வங்கி உதவியளிக்குமென அவர் தெரிவித்தார்.

### ஜோன்ஸன் வேண்டுகோள்

முன்னதாக உலக வங்கிக் கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி திரு ஜோன்சன் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அளிக்கப்படும் உதவியில் வெட்டு எதுவும் செய்ய வேண்டாமென்று உலகிலுள்ள செல்வந்த நாடுகளிடம் விண்ணப்பித்துக் கொண்டார்.

அப்படி உதவியைக் குறைப்பது கடந்த 20 வருடங்களாக நாம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு ஆற்றிவரும் கடமைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துவிடுமென அவர் எச்சரித்தார்.

---

## சவுதி அரேபியா மீது ஏமன் குற்றச்சாட்டு

ஸனா, ஒக்.1

ஏமன் குடியரசு ஜனாதிபதி தமது அரசாங்கத்திற்கெதிராகப் புரட்சி நடத்தும்முடியரசு வாதிகளுக்குச் சவுதி அரேபியா ஆயுதங்களை அனுப்பி உதவி செய்து வருவதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.

முடியரசு வாதிகளுக்குச் சவுதியரேபியா ஆயுத, நிதி உதவிகள் அளித்து அவர்களின் புரட்சி இயக்கத்திற்கு ஊக்கம் அளித்து வருவது இப்போது பல காலமாக அறியப் பட்ட விஷயமாகும், ஏமன் ஜனாதிபதி சவுதி அரேபியாவைப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருப்பது இதுவே முதற்தடவையாகும்.

# சீனா மீது ரஷ்ய பத்திரிகை சீற்றம்

மாஸ்கோ, ஒக்.1

ரஷ்ய அரசாங்கப் பத்திரிகையான 'இஸ்வெஸ்டியா' சீனத்தலைவர் திரு. மா சே துங்கையும், சீனக் கொள்கையையும் மிகக் கடுமையாகத் தாக்கி எழுதியுள்ளது.

ஒக்டோபர் புரட்சி தினத்தையொட்டி வரையப்பட்ட ஒரு விமர்சனக் கட்டுரையில் முன்னர் பீக்கிங்கில் ரஷ்யப் பத்திரிகை நிருபராகக் கடமையாற்றிய ஒருவர் ரஷ்யாவின் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் கண்டிப்பதே சீனாவின் கொள்கையாகும் என்று குற்றஞ் சாட்டியுள்ளார்.

சீனத்தலைவர் திரு. மா சே துங் சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் காட்டிக்கொடுத்து விட்டதாகவும் அவர் அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்டோபர் புரட்சிக்கொண்டாட்டத்தைச் சீன மக்கள், பயமும், பயமுறுத்தலும் கலந்த சூழ்நிலையிலேயே கொண்டாடுவதாகவும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செக்கோஸ்லாவாக்கியாவில் ரஷ்யத்துருப்புகள் பிரவேசித்ததைச் சீனா கண்டித்திருப்பதையும் கட்டுரையாளர் எடுத்துக்காட்டி, அது சீனாவின் ரஷ்ய எதிர்ப்புக் கொள்கையின் ஒரு அம்சமே யன்றிவேறில்லை என்று காட்டியுள்ளார்.

சீனாவின் எல்லையில் ரஷ்யா தனது துருப்புகளை அதிக அளவில் குவித்து வைத்திருப்பதாக அண்மையில் சீனப்பிரதமர் திரு. சூ என்லாய் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுப் பற்றிக் கட்டுரையாளர் எதுவும் குறிப்பிடவில்லை.

---

## ரஷ்யவிண்கலம் ஸொண்ட்—5

பம்பாய், ஒக்.1

சந்திரனை வலம்வந்துவிட்டுப் பின்னர் பூமிக்கு வெற்றிகரமாகத் திரும்பி வந்தசோவியத்விண்வெளிக்கலமான 'ஸொண்ட்-5' ஐ ரஷ்யாவுக்குக் கொண்டு செல்வதற்கென ரஷ்ய விசேஷ விமானமொன்று நேற்று பம்பாய் வந்து சேர்ந்தது.

'ஸொண்ட்—5' கடந்த 29ந்திகதி யன்று சந்திரனை வலம் வந்தபின் மொரீசியஸ் தீவுக்கருகே இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் வந்திறங்கியது.

[7-ம் பக்கம் பார்க்க]

# உலகின் மிகப் பெரிய விமானம்

## 500 பேரை உள்ளடக்கும் அமெரிக்க 'பொயிங்-747'

வாஷிங்டன். ஒக். 1

உலகின் மிகப்பெரிய விமானமான 'பொயிங்747' அமெரிக்காவிலுள்ள விமான உற்பத்திச் சாலையொன்றிலிருந்து நேற்று முதற் தடவையாகத் தனது முழு உருவத்துடன் வெளியே வந்தது.

இந்தவிமானத்துக்குச் செலவிடப்பட்ட தொகை 15 லட்சம் ரூபாயாகும்.

ஒரேநேரத்தில், ஒவ்வொரு நேர்வரிசையிலும் பத்துப் பத்து ஆசனங்களைக் கொண்ட 500 பேரை உள்ளடக்கும் இந்த விமானம், 1970-ம் ஆண்டு முதற்பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

பல்வேறுநாட்டு விமான சேவைகள், இந்த விமான வகைகளில் 160 விமானங்களை, மொத்தம் 30 கோடி ரூபாய் செலவில் 'ஓடர்' செய்திருக்கின்றன,

விமானத்துக்கு பெயர் சூட்டும் விழாவில், 26 சர்வதேச விமான சேவைகளைச் சேர்ந்த 26 விமானப்பணிப் பெண்கள் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உரிமையின் ஊற்று வாய் கடமைதான். நாம் எல்லோரும் நம் கடமைகளைச் செய்தால் உரிமைகளைத் தேடி வெகுதூரம் செல்லத் தேவையிருக்காது. கடமைகளைவிடுத்து உரிமைகளின் பின்னால் ஓடினால் அவைகளும் நம்மிடமிருந்து நழுவி ஓடிக் கொண்டேயிருக்கும்.

—மகாத்மாகாந்தி

ஈழநாடு
National Tamil Daily
Jaffna
Post Box Jaffna
Telephone 389.

... கொண்டாடும் ... யாழ்ப்பாணம் ... 16-ந் திகதி
(2-10-68)

## உரிமையும் கடமையும்

காந்தி ஜெயந்தி நூற்றாண்டு விழா இன்று ஆரம்பமாகிறது. இலங்கை உட்பட உலகநாடுகள் பலவற்றிலும் பல்வேறு முறைகளில் பல்வேறு நினைவுச் சின்னங்களுடன் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

காந்திஜியைப் பற்றி எவ்வளவோ எழுதலாம்; மணிக்கணக்கில் நாட்கணக்கில், மாதக்கணக்கில் பேசலாம்.

காந்திஜி இந்தியாவுக்கு மட்டும் விடுதலை பெற்றுக்கொடுக்கவில்லை. இலங்கை உட்பட ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவும் விடுதலை பெற்றதும் காந்திஜியால்தான்.

அரசியல் விடுதலையடைந்தபோதிலும் இந்தியா, இலங்கை மற்றும் உலகநாடுகள் பலவும் காந்திஜி காட்டியவழியை சரியாகப் பின்பற்றவில்லை. காந்தி நூற்றாண்டிலாவது அவர்காட்டிய வழியைப் பின்பற்ற சங்கற்பம் பூணவேண்டும்.

இலங்கைவாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் காந்திஜியை ஆரம்பத்திலிருந்து அறிந்து தெளிந்து, உணர்ந்து பின்பற்ற வேண்டியது அவசியம். இந்திய மக்கள் சமஉரிமை அற்றவர்களாகவும் இன, மத, ஜாதிகளாகப் பிரிந்துமுண்டு அடிமை வாழ்வில் ஊறித் திளைத்திருந்த நிலையிலேயே இலங்கைவாழ் தமிழ்மக்கள் இன்றும் உள்ளனர். காந்திஜி வகுத்த நிர்மாணத்திட்டம் இங்கு இப்பொழுது தான் மிக மிக அவசியமாகத் தேவைப்படுகிறது.

உரிமையைப் பற்றிப் பேசும்போது, உரிமைகளுக்காகப் போராடும் போது தங்கள் கடமைகளையும் உணர்ந்து செயற்படாவிடில் குழப்பம் தான் மிஞ்சும் என்றார் காந்திஜி. இன்று இலங்கையில் இதுதான் மிஞ்சியிருக்கிறது. தமிழ் மக்களும் சரி மற்றும் சிறுபான்மைச் சமூகத்தினரும் பெரும்பான்மைச் சமூகத்தினரும் 'உரிமைகள்' பற்றித்தான் பேசுகிறார்கள். அவர்கள் தங்கள் கடமைகளையும் உணர்ந்து அவற்றை நிறைவேற்ற முன்வருவதற்கு காந்தி நூற்றாண்டு வழிகாட்டுமாக.

## இடமாற்றத்தின் நோக்கமென்ன

வெளிநாடு சென்று ஒரு துறையில் சிறந்த பயிற்சிபெற்று நிபுணராகத் திரும்பி வருவதை அவரது நிபுணத்துவத்துக்குச் சிறிதும் தொடர்பற்றவேறு ஒரு துறையில் அமர்த்தும் வேடிக்கையான, முட்டாள்தனமான செயல் இலங்கையில்தான் காணமுடிகிறதென்றாலும் இப்படியொரு முழுமுட்டாள்தனமான காரியத்தையும் இங்கு செய்ய வேண்டுமா?

குழந்தைகள் பராமரிப்பு பாதுகாப்பு சேவையில் உதவி ஆணையாளராகவும் பாதுகாப்பு பிரதம அதிகாரியாகவும் கடமையாற்றி வந்த திரு. பி. கே. தேவேந்திரா உணவு உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டு உணவுக்கட்டுப்பாட்டிலாகாவுக்கு மாற்றப்பட்டிருக்கிறார். திரு. தேவேந்திரா குழந்தைகள் பராமரிப்பு, பாதுகாப்பு சேவையில் நீண்டகாலமாகப்பணி யாற்றிவருபவர்; குழந்தைகள் பராமரிப்பில் தம்மையே அர்ப்பணித்திருந்தவர். இத்துறையில் இரண்டுவருடகாலமாக வாஷிங்டனில் விசேஷபயிற்சி பெற்றுத் திரும்பியவர்.

பயிற்சியும் அனுபவமும் உள்ள திரு. தேவேந்திராவை உணவுக்கட்டுப்பாட்டிலாகாவுக்கு இடமாற்றம் செய்திருப்பதன் நோக்கமென்ன? அவசியமென்ன?

குழந்தைகள் பராமரிப்பு, பாதுகாப்பு என்பது சுலபமான விஷயமல்ல. இத்துறைப்போதிய பயிற்சியும் திறமையும் வேண்டும். பயிற்சியும் திறமையும் அத்துடன் ஆற்றலுமுள்ள திரு. தேவேந்திராவை இப்பதவியிலிருந்து மாற்றவேண்டுமென்ற யோசனை எந்த மூளையில் உதித்ததோ! இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்து குழந்தைகள் பாதுகாப்பு பராமரிப்பு சபையிலிருந்து டாக்டர் எல்.ஏ. அபயரத்தின ராஜினாமாச் செய்துதமது வன்மையான ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கிறார்.

ஒரு துறையில் பயிற்சியும் திறமையுமுள்ளவர்களை அவர்களுக்குப் புறம்பான ஒருதுறைக்கு நியமிப்பதும் இடமாற்றம் செய்வதும் வேண்டுமென்றே செய்யப்படும் நடவடிக்கைகளாகும். இதுவிஷயத்தில் அரசாங்கம் கவனமாக இருப்பது நல்லது. விவசாயத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை குழந்தைகள் பராமரிப்பில் பயிற்சி பெற்றவர்களை அரிசிக் கூப்பன் வழங்குவதற்கும், கடற்றொழிலில் பயிற்சி பெற்றவரை விவசாயத்துக்கும் ஈடுபடுத்தினால் நாடு முன்னேறுமா, அரசாங்கம் தான் தனது திட்டங்களை நிறைவேற்ற முடியுமா? திரு. தேவேந்திராவின் இடமாற்றம் பற்றி மட்டுமல்லாமல் விசேஷபயிற்சி பெற்றவர்களின் நியமனங்கள் இடமாற்றங்கள் பற்றியும் உடனடியாக ஆராய்வது நல்லது.

### வெளியிலும் ...டம்

அடுத்த வருடத்திலிருந்து ஆயுள்வேத வைத்தியர்களை வெளியிலிருந்து படித்துப் பட்டம் பெறுவதற்கு சுகாதார அமைச்சு ஒழுங்கு செய்து வருகிறது.

காந்திஜெயந்தி நூற்றாண்டுவிழா இன்...

# இருபதாம் நூற்றாண்டி... மகா புருஷர் மகாத்...

எல்லா மனிதர்களுக்கும் எல்லாவிதத்திலும் உதவக்கூடிய சக்திவாய்ந்தவராக மகாத்மா காந்தி விழங்கினார், சகலவிதமான மனிதர்களையும் அவர் ஒன்றாகவைத்திருப்பதில் சமர்த்தர் என்று நேருஜிகூட அடிக்கடிசொல்வதுண்டு.


'மிதவாதி, அதுபோலவே தீவிரவாதி என்று என்னை அறிந்த நண்பர்கள் எனக்கு சான்றிதழ் வழங்கியுள்ளார்கள். இம்மாதிரி பலதரப்பட்ட மனிதர்களிலும் நண்பர்கள் எனக்கிருப்பதற்கு நான் கடைப்பிடிக்கும் அஹிம்சை தான் காரணம் என்று நான் நம்புகிறேன்' என்று மகாத்மா ஒருமுறை கூறினார்.

சுதந்திரப் போராட்டத்தில் பலதரப்பட்ட மனிதர்களையும் காந்திஜி ஈடுபடுத்தியதற்கு அவரிடமிருந்த தார்மிகச் சக்திதான் காரணம். பொலிசாரின் அடக்குமுறைக்கு எதிராக மக்கள் ஒரு கரத்தைக்கூட அசைக்காமல் உறுதியோடு நின்றதற்கும் இந்தச்சக்தியின்மகிமைதான் காரணம்.

காந்திஜியைப்பின்பற்றிக்கொண்டவர்களில் இளம் ஜவஹர் முக்கியமானவர். அடிமைத்தனத்தை அடியோடு ஒழிக்கும் அதேவேளையில் மகாத்மா மக்கள் மத்தியில் அச்சத்தையும் நீக்கி வந்தது தான் ஜவஹரை மிகவும் கவர்ந்தது. 'துணிவு இல்லை யென்றால் அங்கு அறநெறிக்கு இடமில்லை, சமயத்துக்கு இடமில்லை, அன்புக்கு இடமில்லை' என்று மகாத்மா அடிக்கடி சொல்வார்.

அடிமைப்பட்ட ஆசிய நாடுகளுக்கு மட்டுமல்ல... விலும் நசுக்கப்பட்ட, நசுக்கப்படுகின்ற மக்களு... விளங்கியவரும், இருபதாம் நூற்றாண்டின் தனிப்... தின் தேசப் பிதாவும் அஹிம்சா மூர்த்தியும் ஜீ... தனிவருமான மகாத்மாகாந்தியின் நூற்றாண்டு... டங்கள் உலகெங்கும் இன்று ஆரம்பமாகின்றன.

வாழ்க்கையின் பல்வேறு நிலைகளில் பல்வேறு... மனிதர்களையெல்லாம் ஒன்று சேர்த்து நாட்டின்... மாவீரர்களாகவும் ஆத்மீகப் பெரியார்களாகவும்... னார், என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.



### நேரு சந்திப்பு

நேருவை அவரது 25 வயதில் காந்திசந்தித்தார். அவர்கள் ஒருவருக்கொருவர் ஆகர்ஷித்துக்கொண்டார்கள்.

'ஹரோ' பள்ளி மாணவனும், கேம்பிரிட்ஜ்பட்டதாரியும் ஆடம்பரமான சூழலில் வாழ்ந்தவருமான அவர் மகாத்மாவை மயக்கிவிட்டார். ஜவஹரிடமிருந்த துணிவு மற்றவர்கள் மத்தியிலும் விளம்பிக்கும் என்று மகாத்மா அறிந்தார்.

'இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடுவதென்பது மரியாதைக்குரிய விஷயந்தான் ஆனால் இந்தியாவின் சுதந்திரத்துக்காக காந்திஜியின் தலைமையில் போராடுவது இரட்டிப்பு அதிர்ஷ்டமாகும்' என்று நேருஜி தமது ஜூதல்வழக்கு விசாரணையின்போது கூறினார்.

'ஜவஹர்லால் எனது வாரிசு, என் ஸ்தானத்தை அடுத்து வகிக்கப் பேசுகிறவர், அவர் எனது சட்டபூர்வமான வாரிசுங்கூட. நாடு அவர் கைகளில் பத்திரமாக இருக்கும்'. இப்படிக்கூறிய மகாத்மா, பின்னொருதடவை, 'நான் மறையும்போது நான் கைக்கொண்ட காரியங்களையெல்லாம் அவர் கைமேற்பார். நான் போன பிறகு எனது மொழியை அவர் பேசுவார்' என்றார்.

### நவாப் பக்கிரானார்

பண்டிட் மோதிலால்நேருவிடமிருந்த 'நவாப்' [அரச] தன்மையை ஒரு 'பக்கீர்' நிலைக்கு மாற்றிவிட்டார் மகாத்மா என்று கூறுவதுண்டு. மோதிலால் மகாத்மாவின் அடியவனியாகத் தமைமையை மதித்தார். அதே சமயம் அவரிடம் ஆக்கிரமிப்பு மனப்பான்மையில்லாதிருப்பதையும் உணர்ந்தார். காந்திஜியின்வார்த்தைகளும் செயல்களும் உயர்வானவையாகவும் தெளிவானவையாகவும் இருப்பதை அவர்மெச்சிக்கொண்டார். மகன் ஜவஹரைப்போலவே மகாத்மாவின் மனப்போக்கின் தன்மையில் மோதிலாலும் அடிக்கடி குழம்பிப் போவதுண்டு

"எனது தகப்பனார் தமது எண்ணத்தை இன்னொருவருக்காக மாற்றிக் கொள்ளக்கூடியவரல்ல, ஆனால் காந்தீதாவது அவருக்கு திருப்தி ஏற்பட்டு மனதை மாற்றிக் கொண்டாராலால் ஒருபோதும் மாற்றிக்கொள்ள மாட்டார்" என்ற நேருஜி ஒருமுறை தமது த... பற்றி கூறினார். இவ்வா... மோதிலால் குடும்பம் மு... தம் அப்பொழுது சி... குழந்தையாக விருந்த... திராவுட்டபட காந்திஜி... வழிமை... பின்பற்ற... ...கின்ட...கள்.

### ஒற்றுமை சக்தி

மனிதவுடலையும்மன... யும் ஒன்றாக இயக்க... பெரிய நகரங்களையும்... கிராமங்களையும் இணை... காரியமாற்றச் செய்... ஏழைகளையும் பணக்கார... களையும் இணைக்கவும்...

— வி. வி. ...

ஜியிடம் அபாரசக்தி இ... தது. தமதுசொந்த ... பாடுகளை அறிந்திருந்த... பிறரிடமும் பூரணத்... தையவர் எதிர்பா... வில்லை.

'சம்பாரண் போராட்... த்தில் மகாத்மா ராஜேந்... பிரஸாத்தை சந்தித்... 'பார்தோலி' போராட்... தில் தலைமைவகிக்க ... சாய்பட்டேலைத் தேர்... டுத்தார். தாந்தியில் எ... குத்தெரியாதஒருமனித... பிடித்து தலைமைவகி... செய்தார். அந்த விடு... மங்காப்புகழோடு இன்... விளங்குகிறார். மனித சம... த்தில் பல்வேறு மேர்... களையும் அவதானித்த ... எங்கெங்கு மேன்மை... குணங்கள் காணப்... னவோ அவைகளையெல்லாம் அ... களை ஊக்குவித்தார்.

இருளடைந்தஒரு பகுதி... முதல்தடவையாக வெ... டையடித்த அந்த சி... மனிதர் இறைக்கப்ப...

## எழுபத்திரண... காந்தி...

கொழும்பு, பு... மகாத்மாகாந்தி ... றாண்டுவிழாவில் இதுவ... 72 நாடுகள் கலந்துகொ... முன்வந்துள்ளன.

இலங்கையில் காந்திஜி... பெயரால், கிராமாபிவி... த்திட்டம் ஒன்றும், ... ஸில் பொதுமக்களுக்கு... ஒரு மைதானமும் நிற... வடவிருக்கின்றன. து... மொழியில் மகாத்மா... வாழ்க்கை வரலாறு ... வரும், தார்—ஸல் ... மின் ஞாபகார்த்த நி... மொன்றும் அமைக்கப்... விருக்கின்றது.

இலங்கை, பிரான்... கென்யா, தான்ஸானி... ஆகிய நாடுகளில் காந்திஜ...

## "வழிகாட்டி"

— அரியாலையூர், வே. ஐயாத்துரை —

கொள்ளத் தரும்வழி காட்டி — அன்பு
வெள்ளத்தி லாடிக் களித்தநம் காந்தி
உள்ளத்தி லேயொளி கொண்டார் — இந்த
உலகத்தி லேஞாளி யாகிப் பொலிந்தார்

உண்மைத் திறத்தினர் காந்தி — தன்னை
ஒறுப்பதி லும்முளச் சாந்தியே கண்டார்
வண்மை பரந்திடும் வாழ்க்கை — வாழ்ந்து
வையத்தி லேவழி காட்டியதந்தை

சுதந்தரச் சுதந்திரத் தந்தை — என்றும்
சுயநலம் கருதாத அவர்தூய சிந்தை
நிந்தனைக் கஞ்சாத நெஞ்சர் — நல்ல
நெறியோடு நிறைவுற்று நிலைபெற்ற தந்தை

ஆட்சியைக் கைப்பற்றித் தந்தார் — அதை
ஆளவிடுத்தே அரும்பணி செய்தார்
மாட்சிமை பற்றிய ... — இந்த
மண்ணிலே மேன்மை காப்பொரு ளானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோணேச தமிழ் வித்தியாலயத்தில் புதிய திருப்பம்'

## வித்தியாதிபதி ஒலிவர் பாராட்டுகிறார்

கோணே, செவ்

'பெற்றோர், ஆசிரியர், மாணவர், அரசாங்கம் ஆகியவற்றுடன் ஒத்துழைக்கவல்ல அனுபவமும் திறமையுமுடைய புதிய அதிபர் திரு. வ. நடராசா பதவியேற்ற குறுகிய காலத்துள்ளே கோணேச சாந்தமரியாள் தமிழ் மகாவித்தியாலயம் முன்னேறியுள்ளது. சாரணர் படை ஒன்றையும் அமைத்துப் பதக்கம் அணியும் விழாவினை இன்று சிறப்பாகச் செய்ததனைக் கண்டு இப்பாடசாலை இவ் அதிபர் தலைமையில் எதிர் காலத்தில் எவ்வளவு முன்னேறப் போகின்றது என்பதைக் கண்டு பெருமிதமடைகின்றேன்.

மேற்கண்டவாறு கோணே சாந்தமரியாள் தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சாரணச் சிறுவர்களுக்குப் பதக்கம் அணியும் விழா வைபவத்துக்குத் தலைமை வகித்த கோணேப் பிரதேச வித்தியாதிபதி திரு. ஒலிவர் அபயசேகரா தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் உங்கள் பெற்றோர் ஆசிரியர் சங்க ஆண்டுக்கூட்டத்தில் பெருந்தொகையினர் சமுகமளித்து நிறைவேற்றிய தீர்மானத்துக்கு மதிப்பளித்து நடவடிக்கை எடுப்பேன். அரசாங்கமோ முழு உதவியும் அளிக்கமாட்டாது. அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் சொற்ப உதவியுடன் உங்கள் முயற்சியும் அதிபரின் முயற்சியும் சேர அதிக பலனைப் பெறக்கூடியதாயிருக்கும். உடனடியாக பயிற்சிபெற்ற கணித, விஞ்ஞான ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு நியமிப்பேன். இப்பாடசாலையை பக்கத்தில் புதிய இடத்தில் புதிகட்டடத்தில் விரைவில் நிறுவ முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறேன். அப்பொழுது அங்கு வசதிகளை அமைத்து ஆவன செய்வேன்.

இப்பாடசாலையில் சாரணர் விழாவில் பங்குபற்ற 15 நிமிடம் அல்லது 20 நிமிடம் போதும் என எண்ணியிருந்தேன். தமிழ், சிங்கள, ஆங்கில கலை நிகழ்ச்சிகளும், நவராத்திரி பூசையும் மற்றும் பல ஒழுங்குகளும் என்னை இரண்டரை மணிநேரமாகத் தாமதிக்கச் செய்துவிட்டன. இப்பொழுதுள்ள புதிய அதிபர் புதிய திருப்பத்துக்கு இம்மகா வித்தியாலயத்தைக் கொண்டு செல்வதற்கு உங்களதும் எங்களதும் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும்.

கோணேப் பிரதேச ஆணையாளர் திரு. எம். என். பெரேரா பேசுகையில், கோணேப் பிரிவில் தமிழ் பேசும் சாரணர் படையினராக இம்மகா வித்தியாலயத்து சாரணர் இடம்பெற்றமை எனக்கு மகிழ்வுதருகின்றது. இன்றே சாரணர் கொடி ஒன்றையும் புதிதாக வாங்கியமை பாராட்டத்தக்கது. பெருந்திரளான பெற்றோர் இவ்விழாவுக்குச் சமுகமளித்திருந்தமை மேலும் இவ்வியக்கம் சிறப்புறுமென்பதையே காட்டுகின்றது. இப்பாடசாலைப் புதிய அதிபர் திரு. வ. நடராசாவின் ஆர்வத்தால் தான் இச்சாரணர்படை புத்துயிர் பெற்றுள்ளது.

கோணே வித்தியாதிபதி திரு. ஒலிவர் அபயசேகரா தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். சாரணர் திரு. எம். இறிஸ்தேவர் சாரண சிறுவரின் சத்தியப்பிரமாணங்களை ஏற்றுக்கொண்டார். கோணேப் பிரதேச சாரண ஆணையாளர் திரு. எம். என். பெரேரா சாரணர்களுக்குச் சின்னங்களை வழங்கினார். அதிபர் திரு. வ. நடராசா சாரணர்களுக்கு கழுத்துப்பட்டிகளை அணிவித்தார். திரு. எஸ். தில்லைநாதன் சாரணத் தண்டுகளை வழங்கினார். செல்வன் .........தையா நன்றியுரை கூறினார்.

---


ஈழநாடு

# தினக்குறிப்பு 1969

| FEBRUARY 1969—தை கிலக | |
|---|---|
| 2 Sunday<br>20 ஞாயிறு<br>போயாவின் பின் 1-ம் நாள்<br>தைப்பூசம்<br>பூரணை விரதம்<br>காணிக்கைத் திருநாள் | |
| 3 Monday<br>21 திங்கள்<br>போயாவின் பின் 2-ம் நாள் | |

அழகிய கடதாசியில்
வழமைபோல்
சகல விபரங்களுடனும்
தயாராகிக்கொண்டிருக்கிறது.

விற்பனையாளர்கள் மனேஜருடன்
தொடர்பு கொள்ளவும்.


---

## பெண்கள் அதிகரிப்பு

கழிபுரம், செவ்

மனைவன் பென்சன் பணம் பெறுபவர்கள் இம்மாதம் முதல் அதிக பணத்தைப் பெறுபவர்களெனத் தெரிகிறது. இலங்கை அரசாங்கத்தினரின் நாணய மதிப்புக் காரணத்தினாலேயே இவ்விதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. பென்சனில் 45 வீதம் உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

---

## உலகத்துக்கு சொந்தமானவர் காந்தி மகான்

உரும்பராய், செவ்

கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சை என்ற ஆயுதத்தினை உதவிகொண்டு இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த பெரியவர் காந்திமகான். காந்தியடிகளின் அகிம்சைப் போராட்டம், சுதந்திரம் பெறமுயன்றுகொண்டிருந்த நாடுகளுக்கெல்லாம் முன்னோடியாய் இருந்தது. காந்திமகான் இந்தியாவுக்கு மட்டும் உரியவர் அல்லர் உலகம் முழுவதிற்குமே உரித்துடையவர் ஆவர். எனவே காந்தியடிகள் உலகப் பெரியார்களுக்குள் அதி முக்கியமானவர் என்றும் மிளிர்வாராகுக.

உரும்பராய் வசந்தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற கும்பாரம்ப விழாவின்போது உரையாற்றிய ஆசிரியர் திரு க. பரசுபிரமணியம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் க. குமாரசேகரம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

---

### மாற்றம்

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ...... உள்நாட்டு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

---

# 'மூடப்பட்ட ஆலயங்கள் திறக்க நடவடிக்கை எடுக்குக'

## அரசாங்கத்தை கோருகிறது தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்

யாழ்ப்பாணம், புதன்

சாதிப்பாகுபாடு காரணமாக வல்லிபுரக்கோவில் திருவிழாவை நிறுத்திக் கோவிலை மூடியமை அன்மையாகக் கண்டிக்கும் தீர்மானமொன்று தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினரால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத்தலைவர் எஸ். ரி. என். நாகரத்தினம் தலைமையில் தொழிற் சங்க சம்மேளன காரியாலயத்தில் நடைபெற்ற வெகுஜன இயக்க பொதுச் சபைக்கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோவில்களை மூடுவது சமூகக்குறைப்பாட்டு ஒழிப்புச்சட்டத்தையும், சமய ஒழுங்குகளையும் மீறிய செயலாதலால் மூடப்பட்ட ஆலயங்களை அரசாங்கம் உடனடியாகப் பொறுப்பேற்று இந்துவிவகார ரச்சபையிடமோ, இந்துமாமன்றத்திடமோ ஒப்படைத்து சகலரும் வழிபடத்திறந்துவிட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோருவதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க மகாநாட்டை இம்மாதம் 28-ம் திகதி நடாத்துவதெனவும், சகல ஆலயங்களையும் தேநீர்க்கடைகளையும் சகல மக்களுக்கும் திறந்துவிட அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் நேரடி நடவடிக்கையின் முதற்கட்டமாக பாராளுமன்ற வாசலில் சத்தியாக்கிரகம் மேற்கொள்வதென்றும் மீண்டும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. [கா. நி.]

---

## புங்குடுதீவு வித்தியாலய ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

புங்குடுதீவின் கல்வி நிலை உயர்வடைவதற்கு இத்தீவின் மத்தியிலமைந்துள்ள மகாவித்தியாலயத்தில் முதல் வகுப்புத்தொடக்கம் ஜி. சி. ஈ. உயர்தரவகுப்பு வரை இடம்பெறவேண்டியது அவசியம் என ஊர்காவற்றுறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. எஸ். நல்லையா புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற புங்குடுதீவு வித்தியாலய ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

புங்குடுதீவின் ஏனைய 14 பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும், பொதுமக்களும் இதற்கு ஒத்துழைக்கவேண்டுமென்றும், இத்தீவின் கல்வி வளர்ச்சிக்கான முறையில் கல்வி அதிகாரியுடன் ஒத்துழைக்க ஒரு ஆலோசனைச் சங்கமாக இச்சங்கம் இயங்கவேண்டுமென்றும், இவ்வாறே மற்றும் ஒவ்வொரு தீவிலும் சங்கங்கள் நிறுவப்பட்டு, அவை ஊர்காவற்றுறை வட்டார வித்தியாலய ஆசிரிய சங்கத்தின் கிளைகளாக இயங்க வேண்டுமென்றும் திரு. நல்லையா சொன்னார்.

ஊர்காவற்றுறை வட்டாரக் கல்வியதிகாரி நிரந்தரத் தலைவராகவும், மகா வித்தியாலய அதிபர் திரு. ஆர். சச்சிதானந்தம் தலைவராகவும், திரு. என். கார்த்திகேசு செயலாளராக திரு. என். கனகதிப்பிள்ளை உப செயலாளராகவும், திரு.

---

## "பேரின்பவாழ்வுக்கு குறுகிய வழி"

உரும்பராய், செவ்.

"இறைவனைத் தாயாக உருவகித்து வழிபாடியற்றுவதே சக்தி வழிபாடாகும். இம்மையில் காரிய சித்திக்கும் மறுமையில் பேரின்ப வாழ்வுக்கும் சக்தி வழிபாடு ஒரு குறுகிய வழியாகும்" என வடபிலவத்தை சன சமூகநிலையக்கலைமகள் விழாவில் உரையாற்றிய திரு. இ. வைரமுத்து கூறினர். திரு. மு. லோகநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

இரத்தக் களரியின்றித் தீய சக்திகளை அழிப்பதற்கு துர்க்கை வழிபாடும், அன்பு, மலர்ச்சி, வசீகரம் ஆகியவற்றுக்கு இலக்குமி வழிபாடும், பேரின்பப்பேற்றுக்கு சரஸ்வதி வழிபாடும் உகந்ததாகும் என திரு. இ. அப்பாத்துரை பேசுகையில் கூறினர்.

செல்வன்கள் க. தேவராசன், நா. சிறீதரன் ஆகியோரும் பேசினர். அருந்தவநாதன் குழுவினரின் இன்னிசையும் விழாவில் இடம் பெற்றது.

---

## மாணவர் சுற்றுலா

பருத்தித்துறை, செவ்

வடமராட்சி திருஇருதயக் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவர்கள் அகில இலங்கையிலுமுள்ள சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களை கடந்த இரு வாரங்களாகப் பார்த்துவிட்டு திரும்பியுள்ளனர். ஆசிரியர்கள் திரு. அந்தனி இராசையாவும் திரு தோமஸ் சப்பனும் திரு இ. லீனஸ், திரு கே. சோமசுந்தரமும் சுற்றுலாவுக்குப் பொறுப்பாய் இருந்தனர்.

---

## வடமராட்சியிலும் வயிற்றோட்டக்கொடுமை!

புலோலி, செவ்

வயிற்றோட்ட நோய்க்கு நேற்று முன்தினம் இருகுழந்தைகள் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் பலியாகினர்.

வடமராட்சிப் பகுதியில் இதுவரை வயிற்றோட்டத்தினால் இறந்த குழந்தைகளின் தொகை 7 ஆக அதிகரித்துள்ளது.

மந்திகை ஆஸ்பத்திரியில் இந்நோய்க்கு இலக்கான சிறுவர்கள் குழந்தை வார்ட்டில் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றனர்.

---

### வசதியை அதிகரிக்கவும்

தலைமன்னார் துறைமுகத்துக்குச் செல்லும் புகையிரதங்களில் 'பேர்த்' வசதியை அதிகரிக்கும்படி இ. தொ. கா. அரசியல் பொறுப்பாளர் பதுளை புகையிரதப் பகுதி அதிபரைக் கேட்டுள்ளார்.

---

## நிபுணர்கள் தங்குவர்

கொழும்பு, செவ்வாய்

ராஜாங்க அமைச்சு நாவுலவில் பிழுச்சலைக் கட்டடத்தின் அடித்தளத்தில் அமைக்கும் வடிவமைப்பு நிலையத்தில் உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திச்சாலைகளின் அமைப்பை அபிவிருத்திசெய்வதற்கு உதவியாக இருக்கும் நிபுணர்கள் தங்குவர்.

---

கே. ........ தலைவராகவும் மற்றும் 17 பேர் நிர்வாக சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'இராமேஸ்வரத்தில் நின்று

# கோணேஸ்வரத்தின் பெருமையை சம்பந்தர் பாடியது துவேஷமா?

## அமிர்தலிங்கம் கேட்கிறார்

திருக்கோணமலை, செவ். 'பாடல்பெற்ற தலமான திருக்கோணேஸ்வரத்தின் சரித்திர வரலாற்றை பிக்குகள் மூலம் அறியமுயல்கிறார்கள், பிரதமர் டட்லி சேனநாயக்காவும், புத்த பிக்குவின் செயலையும், ஆர். ஜி.யின் பிதற்றலுக்கும் பயந்து தமிழரோடு போர் தொடுத்திருக்கிறார். திரு. என். கியூ. டயஸ் அவர்கள் அருணமலைக்கு ஒரு முறை வந்தபோது, அங்குள்ள சிவலிங்கம் மரத்தினாலானதா கல்லினாலானதா என அறியும் பொருட்டு அதைக் கத்தியால் சுரண்டிப்பார்த்தார். இது நடந்து ஒருவார காலத்துக்குள் அவருக்கு நடந்த விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே'

கோணேசராலயப் பகுதியைப் புனிதநகராகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று, புனிதநகராகப் பிரகடனப்படுத்துவது பற்றி ஆராய நியமிக்கப்பட்டகமிட்டியின் நடவடிக்கைகளை நிறுத்திவைக்க பிரதமர் உத்தரவிட்ட செயலைக் கண்டித்தும் திருக்கோணமலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு திருக்கோணமலை நகரசபை தலைவர் டாக்டர் பி. சிவானந்தன் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜி பேசுகையில், 'லவசமக்களின் பிறவிச் சொத்து கோணேஸ்வராலயம். இதனைப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமா? அரசியலுக்கும் சமயத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. அரசியலைச் சமயத்துடன் ஒருபோதும் கலக்கக்கூடாது' என்றார்.

திரு. கிருஷ்ணகுட்டி பேசுகையில், 'தெரிந்தோ தெரியாமலோ செய்கின்ற பாவங்களைப் போக்க காசிக்குச் செல்வார்கள். அதே போன்று ஈழம் வாழ் சைவப் பெருமக்கள் திருக்கோணேஸ்வரத்தின் பாபநாசத்தீர்த்தத்தில் நீராடி புண்ணியம் தேடிக்கொள்வர்' என்றார்.

### பிக்குகளுக்குச் சவால்

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில், 'சரித்திரம் கற்றவர்கள் என்று தம்பட்டம் அடிக்கும் சில பேராசிரியர்கள் பிழையான சரித்திரச் சான்றுகளைத் தருகின்றனர். அதிசயமாக மகாவம்சம், சூலவம்சம் போன்ற நூற்றிலிருந்தே இவை பெறப்படுகின்றன. 2-ம் 3-ம் நூற்றாண்டுகளிடையே மகாசேனன் கிழக்கிலே கட்டுவித்த 'கலவேவா' என்னும் ஆற்றின் கோகர்ணவ ஆறு' என்று அழைக்கப்பட்டு வந்தது. இந்த ஆற்றின் மேற்குப் பக்கத்தில் அமைந்திருப்பதே கோகர்ண தேவாலயம். இது இப்படி என்று மகாவம்சமே கூறுகிறது. இந்தக் கூற்றுப் பொய் என்றால் மகாவம்சம் பொய் என்று பௌத்தர்கள் ஒப்புக்கொள்வார்களா? இதுபற்றி வாதாட வேறு என்ன சான்று வேண்டிக்கிடக்கின்றது. இதுபற்றி நான் எந்தப் பௌத்த மதப் பிரமுகர்களுடனும் வாதாடத் தயாராக இருக்கிறேன் என்று இப்போதே சவால் விடுகிறேன்' என்றார்.

முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் கூறியதாவது:-

'இலங்கையில் சைவத் தமிழ்ப் பெருங்குடி இரண்டாவது பிரஜையல்ல. கல்தோன்றி மண் தோன்றாக் காலம் முதல் தோன்றி மூத்த தமிழ்க் குலம். இதே போன்றதுதான் சைவமும். அந்தப் பழம் பெரும் சமயம் இன்று ஏன் வேற்று மனிதனிடம் மன்றாடித் தலைகுனிய வேண்டும். நான் நல்லதையே செய்தேன். என் செயலை சமூகம் தூற்றுது' என்று கூறினார்.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

'கோட்டை கொத்தளங்களைக்கொண்டுதான் இலங்கைக்குப் பாதுகாப்புத் தேட வேண்டும் என்று எங்கள் பிரதம மந்திரியவர் நினைத்தால் யாழ்ப்பாணக் கோட்டையில் மறியல்சாலையும், காலியில் வெற்றிடமாகவும், மன்னாரில் வெறும் இடமாகவும் இடக்கும் போது திருக்கோணமலையிலுள்ள கோட்டை மட்டுமே இலங்கைத் தீவுக்குப் பாதுகாப்பான அரண் என்றும் இதை யார்தான் நம்புவார்கள்? இராணுவ வீரர் நான்கு பத்துப் பேர் இலங்கையைக் காப்பாற்றவில்லை. அங்கு வாழும் மான் இனங்களைக் கொன்று தின்றும் வேறு என்னென்னவோ வெல்லாம் புரிந்துவருகிறார்கள். அங்கு இராணுவத்தினர் கோணேஸ்வரர் ஆலயம் பற்றி யாழ்ப்பாண மக்களும், வவுனியா மக்களும் உண்மை கோரிவாதாடுகின்றனர் என்று ஒரு சிலர் இங்கு துவேஷத்தை நம்மிடையே பரப்புகின்றார்கள் என்பது கேட்டு வேதனையுடன் வெட்கித் தலைகுனிகிறேன். திருக்கோணேஸ்வரத்தின் பெருமைகளை இராமேஸ்வரத்தில் நின்று திருஞானசம்பந்தர் பாடியிருக்கின்றாரே இதுவும் துவேஷமா? இப்படியான சந்தர்ப்பவாதிகளின் பொறுப்பற்ற வெட்டிப் பேச்சுக்களினால் சமுதாயத்தையே மற்றையவர்கள் மதிக்கமாட்டார்கள். இலங்கையின் சரித்திரமே விஜயன் காலத்திலிருந்தே ஆரம்பமாகிறது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறினாலும் அதற்கு எத்தனையோ காலத்துக்கு முன்னதாகவே இருந்த ஒரே ஒரு ஆலயம் திருக்கோணேஸ்வரர் ஆலயம் என்பதைக் கெருவிரைவில் எல்லோரும் உணரப்போகின்றனர்'

திருக்கோணேஸ்வரர் ஆலயப் பிரதேசத்தை புனிதநகராக உடனடியாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என இங்கு கூடியிருக்கும் சைவப் பொதுமக்களின் இருச்சபை கேட்டுக்கொள்கிறது' என்ற தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்: யாழ்ப்பாணம் பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் வைத்தீஸ்வராக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் பொலிஸ் கோஷ்டி வைத்தீஸ்வராக் கோஷ்டியை 7—0 கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டி யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென் அன்ரனிஸ் கோஷ்டி சென் ஜோன்ஸ் கோஷ்டியை 5—0 கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அரியாலை விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ் மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் அரியாலைக் கோஷ்டி யாழ் மத்திய கல்லூரிக் கோஷ்டியை 4—1 கோல்களால் தோற்கடித்தது. இப்போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

சுன்னாகம் ருகின்ஸ் சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் ருகின்ஸ் கோஷ்டி கொக்குவில் இந்துக்கல்லூரி கோஷ்டியை 4—3 கோல்களால் தோற்கடித்தது. இப் போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (தே.நி)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 2-10-68**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அல் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இன்னிசை மியந்திசைக்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 'கருணாமூர்த்தி, விசேஷநிகழ்ச்சி, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ அல் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ அல் 61 மீ

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு, 6-45 வானவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 தானவர்த்திய கச்சேரி, 10-00 நேயர்விருப்பம்.

## ரஷ்யவிண்கலம்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

அந்த விண்கலத்தை ரஷ்யகப்பலொன்று ஏற்கனவே பம்பாய் துறை முகத்துக்கு கொண்டுவந்துள்ளது.

ஆகவே, சந்திரனைச்சுற்றிவிட்டு முதற்தடவையாகப் பூமிக்குத் திரும்பிய விண்கலத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் பம்பாய் மக்களுக்குக் கிடைத்துள்ளது.




# ஆலயக்கதவுகளை மூடுவதால் மதநம்பிக்கை அற்றுப்போய்விடும்'

## பருத்தித்துறை எம். பி. எச்சரிக்கிறார்

உடுப்பிட்டி, செவ். "ஆகமங்களிலும், சரித்திரம், இலக்கியங்களிலும் சாதி என்ற சொல்லுக்கே இடமில்லை. சாதி என்னும் பெயரால் ஒரு இனத்தைத் தள்ளிவைப்பது மிகவும் தவறாகும். தமிழர்கள் இவ்வளவு காலம் சிறுபான்மைத் தமிழரென நசுக்கப்படும் இவ்வேளையில், தமிழர்களுக்கிடையில் பலவாறாகப் பிளவுபட்டுப் பெரும்பான்மைத்தமிழர், சிறுபான்மைத் தமிழர் எனப்பிரித்திருப்பது வேதனையானது. வேடிக்கையானது. இதனால் தமிழர்கள், கலாச்சாரப் பண்பாடுகள் அழிந்துபோக நேரிடும். ஆலயக்கதவுகளைப் பூட்டி வைப்பதால் பொதுமக்களின் மதநம்பிக்கை அற்றுப் போய் விடும்"

மேற்கண்டவாறு பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் கொற்றாவத்தை பூமகள் நூல்நிலைய முதலாவது ஆண்டுவிழாவில் பேசுகையில் கூறினார். விழாவிற்குத் தலைமை வகித்த அல்வாய் மேற்குக் கிராம [illegible] "ஒரு கிராமத்தின் முன்னேற்றத்திற்குக்கிராம முன்னேற்றச்சங்கங்களும், சனசமூக நிலையங்களும் அவசியம். கிராமத்தின் நோக்கங்கள் பூர்த்தியானாலேயே கிராம மக்கள் பயன்பெற முடியும். ஒரு சமூகம் சிறப்பாகச் சிறுபான்மைச் சமூகம் தங்கள் சமூகலாச்சாரப்பண்பாடுகளைப் பேணி வளர்க்கவேண்டும். மூடநம்பிக்கைகளையும், பிற்போக்கு பழக்கவழக்கங்களையும் ஒழிக்கவேண்டும்," என்று கூறினார்.

வடமராட்சிச் சனசமூகநிலையங்களின் சமாஜச் செயலாளர் திரு. எஸ். செல்லையா பேசுகையில், "இக்கிராம இளைஞர்கள் கல்வித்துறையில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். அநீதியான வற்றையும், இல்லாமை வறுமைவற்றையும் ஒழிக்க பாமரமக்களின் சூழ்நிலையில் தற்பொழுது நல்ல உத்தியோகத்தர்கள் உள்ளனர்.

ஒதுக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தாலும் முன்னேறுவது சனசமூக நிலையம் இல்லாத அரசியல் சூழ்நிலையில் சாதிக்கட்டுப்பாட்டைத் தகர்ப்பதே முக்கிய விடமாகும். சந்தோசமுறையில் பிரச்னைகளைத் தீர்க்க வாலிபர் முன்வர வேண்டும். இலங்கைத்தமிழர்களுக்குத் துரோகமிழைக்கக் கூடிய சம்பவங்கள் அண்மைக்காலத்தில் நடந்துள்ளன, தமிழினத்தின் இழிநிலைக்குத் தமிழ் எம். பிக்களே தான் காரணம். தமிழரின் மத பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கும் கோணேசராலயத்தைப் புனிதநகராக்கத் தயங்கும் அரசாங்கம் இனி மேலும் தமிழினத்திற்கு எவ்வித நன்மையும் தருமென எதிர்பார்ப்பது அறிவீனம். இவ்வளவுகாலமும் ஏமாந்ததுபோதும் வருங்காலத்தில் நாம் ஏமாந்தக்கூடாது.

இதனைவருங்கால முற்போக்குச் சக்திகள் உணர வேண்டும் என்று கூறினார்.

வடமராட்சிக்கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. எஸ். நவரத்தினம், சமாதான நீதிபதி திரு. ஆர். சின்னத்தம்பி, திரு. பீ சின்னத்தம்பி, திரு. பீ சிவபாதம் ஆகியோரும் பேசினர். செல்வன் கே. சி. வரராஜசிங்கம் நன்றியுரை கூறினார் "கண்டி அரசன்" என்னும் சமூகநாடகமும் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

